**8094**

| Register Number | | | | | | |
|---|---|---|---|---|---|---|

**Part III**

# புவியியல் / GEOGRAPHY

( Tamil Version )

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 150

## பகுதி - I

குறிப்பு : i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

ii) எல்லா வினாக்களுக்கும் சமமான மதிப்பெண்கள்.

iii) தேவைப்படும் இடங்களில் வரைபடங்கள் வரைக.

### பிரிவு - அ

( மதிப்பெண்கள்: 15 × 1 = 15 )

I. கோடிட்ட இடங்களை நிரப்புக :

1. மிக நுண்ணிய அளவினையுடைய கடலில் மிதக்கக் கூடிய உயிரினங்களை ........................ என்கிறோம்.
2. ........................ ஒரு மிதவெப்ப மண்டல புல்வெளிச் சூழ்வாழிடம் ஆகும்.
3. பணித் திறன்பாட்டினைப் புரிந்து கொள்ள ........................ உதவுகின்றது.
4. புறநகர் வளர்ச்சிக்கு ........................ காரணமாகும்.
5. குடியிருப்பின் அமைவிடப் பண்புகள் குடியிருப்புக்கு ஒரு ........................ தருகின்றன.
6. பொருட்களின் எடையையும் ........................ பொறுத்தே போக்குவரத்துச் செலவு கணக்கிடப்படுகின்றது.
7. ஒரு நாட்டின் நாணய மதிப்பு அந்நாட்டின் ........................ பொறுத்து அமைகிறது.
8. ஒரு நாட்டின் எல்லைக்குள் நடைபெறுகின்ற வணிகம் ........................ எனப்படும்.
9. போக்குவரத்து வலை அமைப்பில் ........................ மற்றும் ........................ உள்ளன.
10. மனிதனால் உருவாக்கப்பட்ட உலகின் முதல் செயற்கைக்கோள் ........................ ஆகும்.

[ Turn over

11. தொலை நுண்ணுணர்வின் இரு வகைகள் .......................... மற்றும் .......................... ஆகும்.

12. .......................... ஆனது நுணுக்கமான பொருள்களின் உற்பத்தி மற்றும் நிலத்தடி நீர் ஆதாரங்கள் பற்றிய நிலப்படங்களைத் தருகின்றது.

13. நன்னீர் ஆதாரங்களை .......................... மற்றும் அது தொடர்பான முன்னேற்றங்கள் மாசடையச் செய்கின்றன.

14. ''நிலைமையை மோசமாக்காதே'' என்பது சீரழிவிற்கான .......................... வழிகாட்டும் கொள்கையாக இருக்கின்றது.

15. உயிரினப் பன்மை மற்றும் காட்டுத் தலங்களின் இழப்புகள் .......................... சார்ந்தவையல்ல.

## பிரிவு - ஆ

( மதிப்பெண்கள்: 15 × 1 = 15 )

II. i) கீழ்வருவனவற்றைப் பொருத்துக :

| | |
|---|---|
| 16. சமுதாயக் காடுகள் | அ) மிகப்பழமையான இயற்தொகுதிகள் |
| 17. முருகைப் பாறைகள் | ஆ) காடுகளின் மேலாண்மை |
| 18. இடைப்பட்ட வயது அமைப்பு | இ) மில்லியன் நகரம் |
| 19. சுற்றுலா | ஈ) வளரும் பொருளாதாரம் |
| 20. கொல்கத்தா | உ) மூன்றாம் நிலைத் தொழில்கள். |

ii) கீழ்வருவனவற்றைப் பொருத்துக :

| | |
|---|---|
| 21. உலக வணிக நிறுவனம் | அ) ஐரோப்பிய பொருளாதார சமுதாயம் |
| 22. பெனலக்ஸ் | ஆ) 1995 |
| 23. சரக்குப் போக்குவரத்து | இ) ஹைதராபாத் |
| 24. வான்வழிப் புகைப்படம் | ஈ) பெட்டகங்கள் ( Container ) |
| 25. தேசிய தொலை நுண்ணுணர்வு நிறுவனம் | உ) காடுகளை ஆய்வு செய்தல். |

iii) கீழ்வருவனவற்றைப் பொருத்துக :

| | |
|---|---|
| 26. தோல் பதனிடும் தொழிற்சாலை | அ) கேடு விளைவித்தல் |
| 27. சீர்குலைவு | ஆ) ஆம்பூர் |
| 28. மீட்சித் திறன் | இ) பழைய சோவியத் நாடுகள் |
| 29. கட்டுப்பாடற்ற நீர் அளிப்பு | ஈ) மீண்டும் செயலாற்றல் |
| 30. அமு தாரியா ஆறு | உ) கனடா |

பிரிவு - இ

( மதிப்பெண்கள்: 10 × 1 = 10 )

III. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும் :

31. துருவங்களைச் சுற்றி தொடர்ச்சியாக காணப்படும் சூழ்வாழிடம்

அ) அயனக் கடல்கள் ஆ) குளிர்ப் பாலைவனம்

இ) மிதவெப்ப மண்டல பகுதிகள் ஈ) புல்வெளிகள்.

32. தற்போதைய உலக மக்கள்தொகை வளர்ச்சி வீதம்

அ) 1·3 ஆ) 1·4

இ) 1·6 ஈ) 2.

33. ஒரு பொருளை சந்தையில் விற்பனைக்கு இடுவதற்கான தேவையான குறைந்தபட்ச மக்கள்தொகை

அ) 0 - 50 ஆ) 50 - 100

இ) 100 - 200 ஈ) 200 - 300.

34. தொழில்கள் அதிகமாக குழுமியுள்ள பகுதிகள்

அ) பாலைவனப் பகுதிகள் ஆ) காட்டுப் பகுதிகள்

இ) மலைப் பகுதிகள் ஈ) மூலப் பொருட்கள் கிடைக்கும் பகுதிகள்.

35. குறிப்பிட்ட பண்டத்தைக் கொடுத்து அதற்கு ஈடாக வேறு பண்டத்தை வாங்குவது

அ) வணிகச் சமநிலை ஆ) பண்டமாற்று முறை

இ) டங்கல் ஒப்பந்தம் ஈ) சிறப்பு எடுப்பு உரிமை.

36. இராணுவம் மற்றும் மருத்துவம் சார்ந்த சேவைகளுக்கு வல்லுநர்கள், நிபுணர்கள் விரைவாக சென்றடைய உதவும் சாதனம்

அ) விமானம் ஆ) ஹெலிகாப்டர்

இ) இரயில்கள் ஈ) கப்பல்கள்.

37. தொலை நுண்ணுணர்வினைப் பயன்படுத்தி பல்வேறு உயர்வான திட்டங்களை வகுக்கும் ஓர் அமைப்பு

அ) எப். ஏ. ஓ. ஆ) ஐ. எஸ். ஆர். ஓ.

இ) டபிள்யூ. எச். ஓ. ஈ) டபிள்யூ. டி. ஓ.

38. சுத்தமான நீர் மக்கள் அனைவருக்கும் கிடைக்க வகை செய்த நாடு

அ) மலேசியா ஆ) நைஜர்

இ) சூடான் ஈ) மளாவி.

39. 20ம் நூற்றாண்டின் வெப்பமான பத்து ஆண்டுகள்

அ) 1920 ஆம் ஆண்டுகள்

ஆ) 1950 ஆம் ஆண்டுகள்

இ) 1970 ஆம் ஆண்டுகள்

ஈ) 1990 ஆம் ஆண்டுகள்.

40. விவசாயத்திற்கு பயன்படுத்தப்படும் நீரினை சிக்கனமாக பயன்படுத்தும் நுட்பம்

அ) ஹைட்ரோபோனிக்ஸ் ஆ) தானியங்கும் நீர்ப்பாசனம்

இ) சிறிய அளவிலான நீர்ப்பாசனம் ஈ) பெரிய அளவிலான நீர்ப்பாசனம்.

பிரிவு - ஈ

( மதிப்பெண்கள்: 10 × 1 = 10 )

IV. சரியான வாக்கியத்தைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

41. அ) மிதவெப்ப மண்டல ஒத நிலங்கள் சதுப்பு நிலங்களாக மாறுகின்றன.

ஆ) மிதவெப்ப மண்டல ஒத நிலங்கள் உவர் சேற்று நிலங்களாக மாறுகின்றன.

இ) மிதவெப்ப மண்டல ஒத நிலங்கள் கழிமுகங்களாக மாறுகின்றன.

42. அ) ஜெர்மானிய சமூக-தத்துவ அறிஞரான மார்க்ஸ், நவீன கம்யூனிசத்தின் தந்தை என அழைக்கப்பட்டார்.

ஆ) ஜெர்மானிய சமூக-தத்துவ அறிஞரான மார்க்ஸ், நவீன கலப்பு பொருளாதாரத்தின் தந்தை என அழைக்கப்பட்டார்.

இ) ஜெர்மானிய சமூக-தத்துவ அறிஞரான மார்க்ஸ், நவீன முதலாளித்துவத்தின் தந்தை என அழைக்கப்பட்டார்.

43. அ) சந்தையை மையமாகக் கொண்ட கோட்பாடு, பொருள்கள் கோட்பாடு

ஆ) சந்தையை மையமாகக் கொண்ட கோட்பாடு, மால்தஸ் கோட்பாடு

இ) சந்தையை மையமாகக் கொண்ட கோட்பாடு, மைய இடக் கோட்பாடு

44. அ) வெபரின் கோட்பாட்டின்படி நகர்ப் புறங்களில் மட்டும் சந்தைகள் காணப்படுகின்றன.

ஆ) வெபரின் கோட்பாட்டின்படி கிராமப் புறங்களில் மட்டும் சந்தைகள் காணப்படுகின்றன.

இ) வெபரின் கோட்பாட்டின்படி குறிப்பிட்ட இடங்களில் மட்டும் சந்தைகள் காணப்படுகின்றன.

45. அ) வளர்ச்சி குன்றிய நாடுகள் வணிகத்தின் மூலம் ஏழ்மைக்கு தள்ளப்படுவது சந்தை நடுக்கம் என அழைக்கப்படுகிறது.

ஆ) வளர்ச்சி குன்றிய நாடுகள் வணிகத்தின் மூலம் ஏழ்மைக்கு தள்ளப்படுவது வணிகப் பொறி மற்றும் சந்தை வீழ்ச்சி என அழைக்கப்படுகிறது.

இ) வளர்ச்சி குன்றிய நாடுகள் வணிகத்தின் மூலம் ஏழ்மைக்கு தள்ளப்படுவது வரையறுக்கப்பட்ட ஒப்பந்தமாகும்.

46. அ) இந்தியப் புறவெளி ஆராய்ச்சி அமைப்பின் தலைமையிடம் பெங்களூர்.

ஆ) இந்தியப் புறவெளி ஆராய்ச்சி அமைப்பின் தலைமையிடம் சென்னை.

இ) இந்தியப் புறவெளி ஆராய்ச்சி அமைப்பின் தலைமையிடம் புது டெல்லி.

47. அ) சரக்குகளின் போக்குவரத்து உலக வணிகத்தை அடிப்படையாகக் கொண்டு நடைபெறுகின்றது.

ஆ) சரக்குகளின் போக்குவரத்து இயற்கை வளங்களை அடிப்படையாகக் கொண்டு நடைபெறுகின்றது.

இ) சரக்குகளின் போக்குவரத்து மக்கள்தொகையை அடிப்படையாகக் கொண்டு நடைபெறுகின்றது.

48. அ) ஏழ்மை எனப்படுவது நொந்து போதல் ஆகும்.

ஆ) ஏழ்மை எனப்படுவது சீரழிவுகள் ஆகும்.

இ) ஏழ்மை எனப்படுவது அவசர நிலை ஆகும்.

49. அ) ஹைட்ரஜன் மற்றும் கார்பன் டைஆக்சைடு இணைந்து நீராக உருவெடுத்தன.

ஆ) ஹைட்ரஜன் மற்றும் ஆக்ஸிஜன் இணைந்து நீராக உருவெடுத்தன.

இ) ஹைட்ரஜன் மற்றும் நைட்ரஜன் இணைந்து நீராக உருவெடுத்தன.

50. அ) உலகில் பயன்படுத்தப்படும் நீரில் 50 விழுக்காடு நீர் பாசனத்திற்காகப் பயன்படுத்தப்படுகிறது.

ஆ) உலகில் பயன்படுத்தப்படும் நீரில் 60 விழுக்காடு நீர் பாசனத்திற்காகப் பயன்படுத்தப்படுகிறது.

இ) உலகில் பயன்படுத்தப்படும் நீரில் 70 விழுக்காடு நீர் பாசனத்திற்காகப் பயன்படுத்தப்படுகிறது.

## பகுதி - II

( மதிப்பெண்கள்: 15 × 2 = 30 )

V. *குறிப்பு :* i) பின்வரும் வினாக்களுக்கு 50 வார்த்தைகளில் சுருக்கமாக விடையளி.

ii) எல்லா வினாக்களுக்கும் சமமான மதிப்பெண்கள்.

iii) பின்வரும் வினாக்களில் ஏதேனும் **பதினைந்து** வினாக்களுக்கு விடையளி.

51. சூழ்வாழிடங்கள் - வரையறு.

52. தலம் - வரையறு

53. எரிபொருள் - வரையறு.

54. சந்தை நடுக்கம் - வரையறு.

55. போக்குவரத்து வலை - வரையறு.

56. இயற்கைச் சீர்குலைவு - வரையறு.

57. நிலச் சரிவு - வரையறு.

58. ''பெந்தாஸ்'' சிறுகுறிப்பு வரைக.

59. கழிமுகம் என்றால் என்ன ?

60. மனிதரின் தரமான வாழ்க்கைக்குத் தேவையானவைகள் யாவை ?

61. சென்ற 400 ஆண்டுகளில் மக்கள்தொகை வரலாறு காணாத அளவு வளர்ச்சியடைய முக்கியக் காரணம் யாது ?

62. எடை இழக்கும் கச்சாப் பொருட்கள் என்றால் என்ன ? உதாரணங்களைத் தருக.

63. பன்னாட்டு வணிகம் என்பது யாது ?

64. ஆழ்கடல் தொடர்பு என்றால் என்ன ?

65. வெவ்வேறு தொலை நுண்ணுணர்வு மேடைகள் யாவை ?

66. 'உணரிகள்' ( Sensors ) என்பன யாவை ?

67. உலகின் நீர் நுகர்வு எவ்வாறு இருக்கின்றது ?

68. மாநிலங்களுக்கு இடையிலான ஆறுகளை இணைத்தல் பற்றி சிறுகுறிப்பு வரைக.

69. உயிரினப் பன்மை என்றால் என்ன ?

70. நீரின் அளவு மற்றும் தரத்தினை உயர்த்த கூறப்படும் இரண்டு வழிகள் யாவை ?

## பகுதி - III

( மதிப்பெண்கள்: 6 × 5 = 30 )

VI. குறிப்பு : i) ஒவ்வொரு வினாவிற்கும் 200 வார்த்தைகளில் விடையளி.

ii) எல்லா வினாக்களுக்கும் சமமான மதிப்பெண்கள்.

iii) ஏதேனும் **ஆறு** வினாக்களுக்கு மட்டும் விடையளி.

71. அயன மண்டலச் சூழ்வாழிடம் பற்றி சுருக்கி வரைக.

72. பொதுவான வயது-பாலின பிரமிடுகள் வெளிப்படுத்தும் சில குறிப்பிட்ட கருத்துக்கள் யாவை ?

73. நகர்ப் பரப்புப்பெருக்கம் - சிறுகுறிப்புத் தருக.

74. நான்காம் நிலைத் தொழில்கள் - குறிப்புத் தருக.

75. பெட்டக போக்குவரத்தின் நன்மைகள் யாவை ?

76. தகவல் பரிமாற்றங்களின் முக்கியத்துவத்தை வெளிக்கொணர்க.

77. நீர் அறத்தினை எவ்வழிகளில் கடைப்பிடிக்கலாம் ?

78. வெள்ளப்பெருக்கு ஏற்படுவதற்கான காரணங்களை விவரி.

79. அமெரிக்க ஐக்கிய நாட்டின் இயற்கை வள மேலாண்மை பற்றி குறிப்புத் தருக.

## பகுதி - IV

VII. *குறிப்பு :* i) ஒவ்வொரு வினாவிற்கும் 400 வார்த்தைகளில் விடையளி.

ii) எல்லா வினாக்களுக்கும் சமமான மதிப்பெண்கள்.

iii) பிரிவு 'அ' விலிருந்து ஏதேனும் **மூன்று** வினாக்களுக்கு மட்டும் விடையளி.

### பிரிவு - அ

( மதிப்பெண்கள்: 3 × 10 = 30 )

80. மால்தஸின் மக்கள்தொகை கோட்பாடு பற்றி ஒரு கட்டுரை வரைக.

81. வணிகத்தில் புவியியல் காரணிகளின் பங்கினை விவரி.

82. நீர் மேலாண்மை பற்றி விவரி.

83. சஹேல் பாலைவனமானதற்கான காரணங்களை விவரி.

84. நன்னீர் ஆதாரங்களை விவரி.

### பிரிவு - ஆ

( மதிப்பெண்கள்: 1 × 10 = 10 )

85. உலக நில வரைபடத்தில் உலகின் தொழிலக வட்டங்களை வரைந்து, சிறுகுறிப்புத் தருக.

*அல்லது*

உலக நில வரைபடத்தில் பெரியளவிலான நில நடுக்கப்பகுதிகளை குறித்து, அதற்கு சுருக்கமான விளக்கம் தருக.